Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 155/2024**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலகிருஷ்ணன் | ஜாதி | : | |
| த/பெ | : | கருப்பணன் | தொழில் | : | ஓய்வு, ஊராட்சி ஒன்றிய அலுவலகம், நிலக்கோட்டை |
| கிராமம் | : | ஆத்தூர் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 61/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2025.

(எதிரி ஆஜர்)

<u>முதல் விசாரணை</u>

நான் ஆத்தூரில் குடியிருந்துகொண்டு வருகிறேன். நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். ஆத்தூர் பைபாஸ் புது பாலம் அருகே எனக்கு வயல் உள்ளது. மேற்படி வயலில் தண்ணீர் பாய்ச்சுவதற்காக முருகன் என்பவரிடம் வயல் காய்ந்து விட்டது. தண்ணீர் பாய்ச்சிவிடு என்று சொன்னேன். முருகன் தான் அந்த ஏரியாவிற்கு தண்ணீர் பாய்ச்சிவிடுவார். உன் சவரியத்திற்கு நான் தண்ணீர் பாய்ச்ச முடியாது என்று சுன்னி மவனே என்று கெட்டவார்த்தையால் திட்டினார். பேசிக்கொண்டிருக்கும் போதே அவர் அரிவாளை எடுத்து இடது விலா பகுதியில் குத்திவிட்டார். அதில் எனக்கு விலா பகுதியில் 3 இடத்தில் வெட்டு காயங்கள் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன், பிறகு மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். 03.03.2024 மாலை 05.00 மணியளவில் சம்பவம் நடந்தது. மாலை 06.00 மணியளவில் நான் வேலை முடித்து சம்பவ இடத்திற்கு வந்தேன். எதிரி என்னை கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று சொன்னார். ஆஜர் எதிரி முருகனை சாட்சி அடையாளம் காட்டினார். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையொப்பத்துடன் கூடிய புகார் மனு **(அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி எத்தனை வருடங்களாக அந்த பகுதியில் தண்ணீர் பாய்ச்சி வரும் வேலை செய்து வருகிறார் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும், 10 வருடமாக செய்து வருகிறார். ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து தான் எதிரியை அந்த பகுதியில் தண்ணீர் பாய்ச்சுவதற்காக நியமித்துள்ளார்கள் என்றால் சரிதான். அதன்படி எதிரி ஒவ்வொரு வயலுக்கும் முறைப்படி

தண்ணீர் பாய்ச்சி கொண்டி வருகிறார் என்றால் சரிதான். கடந்த 10 ஆண்டுகளாக எதிரி மீது எந்த புகாரும் வந்தது இல்லை என்றால் சரிதான். நீங்கள் உங்கள் வயலுக்கு எதிரியை தண்ணீர் பாய்ச்சுமாறு சொன்னபோது எதிரி முறைப்படி தண்ணீர் பாய்ச்சுவதாக உங்களிடம் சொன்னார் என்றால் சரியல்ல, எதிரி நான் கேட்டதற்கு என்னால் தண்ணீர் பாய்ச்ச முடியாது, உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள்ளடா என்று சொன்னார்.

நீங்கள் எதிரி தண்ணீர் பாய்ச்ச முடியாது என்று சொன்னதாக சொல்லும் சங்கதியை புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி உங்கள் வயலுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாது என்று சொல்லவில்லை என்றும், முறைப்படி உங்கள் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுவதாக மட்டும் தான் கூறினார் என்றால் சரியல்ல. எதிரி தண்ணீர் பாய்ச்சும் வேலையை கூலிக்காக செய்துகொண்டிருக்கிறார் என்றால் சரிதான்.

சம்பவம் நடந்ததாக நீங்கள் முதல் விசாரணையில் சொல்லியுள்ள நேரமான 06.00 மணி என்று தான் போலீஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களுடைய வயல் என்பதை காட்டுவதற்கு உரிய ஆவணத்தை போலீசார் விசாரணையில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தின் போது அங்கு யாரும் இல்லை என்றால் சரிதான். நீங்கள் வேலை முடிந்து இருசக்கர வாகனத்தில் பைபாஸில் இருந்து வயக்காட்டு வழியாக வந்தபோது, வண்டியில் இருந்து தடுமாறி கீழே விழுந்த போது கல் குத்தி ஏற்பட்ட காயத்தை வைத்து இந்த புகாரை நீங்கள் எதிரி மீது கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

சம்பவ இடத்தில் இருந்து மருத்துவமனைக்கு உங்களை யார் அழைத்துச் சென்றது என்றால் அந்த வழியாக வண்டியில் போனவர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார், அவர் யார் என்று எனக்கு ஞாபகமில்லை. சம்பவத்தின் போது சத்தத்தை கேட்டு அருகில் இருந்தவர்கள் வந்தார்கள் என்று நீங்கள் சொல்லியுள்ளீர்கள், யார் யார் என்று அவர்களின் பெயர் தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் யாருடைய வயக்காடு என்று புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

எதிரி உங்களை கெட்டவார்த்தையால் பேசவில்லை என்றும், அரிவாளால் குத்தவில்லை என்றும், கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றும், எதிரிக்கு கூலி தர முடியாது என்று நீங்கள் தான் அவரை திட்டியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor